# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள் – 01.07.2026

**(காணொளி காட்சி விசாரணை)**

## முன்னிலை

**திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., எம்.பில்., பி.எல்.,**

**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 6485/A/2023**

திரு.R.சுந்தரேசன் -- மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம், -- பொது அதிகார அமைப்பு
ஆவுடையார்கோவில் வட்டம்,
புதுக்கோட்டை மாவட்டம்.

## ஆணை

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (01.07.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| மனுதாரர் | திரு.R.சுந்தரேசன் அவர்கள் ஆஜரானார் |
| பொது அதிகார அமைப்பு | திரு.தே.வைரவன்<br>பொதுத்தகவல் அலுவலர் மற்றும்<br>தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,<br>ஆவுடையார்கோவில் வட்டம் அவர்கள் ஆஜரானார். |
| சட்டப் பிரிவு 6(1) மனு நாள் | 24.01.2023 |
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)இன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், 23/05/2022-ம் தேதி புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு தான் மனு நீதி முகாமில் கொடுத்த புகார் மனு மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த விபரம் உட்பட 6 இனங்களில் தனக்கு தகவல்கள் வழங்கக்கோரி விண்ணப்பித்துள்ளார். | |

| | |
|---|---|
| சட்டப் பிரிவு 6(3)-ன்கீழ் மனு மாற்றம் செய்த நாள் | 15.02.2023 |
| பொதுத் தகவல் அலுவலரின் பதில் நாள் | ---- |
| பிரிவு 19(1) முதல் மேல்முறையீட்டு மனு நாள் | 27.02.2023 |
| மேல்முறையீட்டு அலுவலரின் பதில் நாள் | ---- |
| பிரிவு 19(3) இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் | 04.04.2023 |

2. இன்றைய தின விசாரணைக்கு பொதுத் தகவல் அலுவலரின் சார்பாக ஆஜரான திரு.தே.வைரவன், பொதுத்தகவல் அலுவலர் மற்றும் தலைமையிடத்து துணை வட்டாட்சியர், ஆவுடையார்கோவில் வட்டம் அவர்கள், மனுதாரர் கோரிய தகவல்களுக்கு மூ.மு.ஆ6/1258/2026, 23.06.2026 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக விரைவஞ்சல் வாயிலாக தகவல்கள் வழங்கப்பட்டதாகத் தெரிவித்து அதன் நகலை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். மேலும், மனுதாரர் கோரிய பட்டா எண்ணிற்கு, இணைய வழியில் பட்டா மாறுதல் செய்யப்பட்டுள்ளதாகவும், 2017-ல் இணைய வழியில் செய்யப்பட்டுள்ள பட்டா மாறுதலுக்கு ஆவணம் எதுவும் இருக்காது எனவும் தெரிவித்தார்.

3. இன்றைய தின விசாரணைக்கு ஆஜரான மனுதாரர், பொதுத்தகவல் அலுவலரால் தனக்கு உரிய காலத்தில். தான் குறிப்பிட்ட இடத்திற்கு எந்த ஆவணங்களின் அடிப்படையில் பட்டா மாறுதல் செய்யப்பட்டுள்ளது என்ற தகவல்கள் வழங்கப்படவில்லை எனத்தெரிவித்தார். தனக்கு உரிய தகவல் பெற்று வழங்குமாறு ஆணையத்தைக் கோரினார். உரிய காலத்தில் தகவல்களை வழங்காத பொதுத்தகவல் அலுவலர் மீது தகவல் அறியும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 20(1) மற்றும் 20(2)-ன்படி அபராதமும், துறை ரீதியான நடவடிக்கை எடுக்கவும் பரிந்துரைக்குமாறு ஆணையத்தைக் கோரினார்

4, இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரரின் மனுவையும் பொதுத் தகவல் அலுவலரின் பதிலையும் இணைத்து பரிசீலனை செய்கையில், உரிய காலத்தில் தகவல் அறியும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழான மனுவிற்கு 30 நாட்களுக்குள் தகவல் அளிக்காமல் 3 ஆண்டுகள் கடந்த நிலையிலும் தகவல் அளிக்காமல், தகவல் அறியும் உரிமைச்சட்டம், 2005-ஐ ஒரு பொருட்டாக கூட கவனத்திலேகொள்ளாமல், ஆவுடையார்கோவிலைச் சேர்ந்த பொதுத்தகவல் அலுவலர் தான் சட்டத்திற்கு அப்பார்பட்ட அலுவலர் என்று நினைத்து கொண்டு எந்தஒரு தகவலும் அளிக்காமல் நடந்து கொண்டதை ஆணையம் வன்மையாக கண்டிக்கிறது. எனவே ஆணையம் இன்றைய விசாரணையின் முடிவில் பொதுத்தகவல் அலுவலருக்கு இறுதி வாய்ப்பளித்து பின்வருமாறு உத்தரவிடுகிறது:-

- ***மனுதாரருக்கு உரிய காலத்திற்குள் தகவல் வழங்காத ஒரு பொது அதிகார அமைப்பின் பொறுப்பில் இருக்கும் உயர் அதிகாரி தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005இன் படி மனுதாரரின் மனு பெறப்பட்டு 30 நாட்களுக்குள் உரிய தகவல்களை வழங்காமல், மனுதாரரின் மனு பெறப்பட்டு 3 ஆண்டுகளுக்கு பிறகு தகவல் அளித்துள்ளது கண்டனத்திற்குரிய செயல். எனவே, மனுதாரருக்கு இதுநாள் வரையில் முழுமையான தகவல்களை வழங்காமல் இருந்த 24.01.2023 நாளன்று பொதுத் தகவல் அலுவலராக இருந்த பொதுத்தகவல் அலுவலர் மற்றும் தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,***

*ஆவுடையார்கோவில் வட்டம், புதுக்கோட்டை மாவட்டம் அவர்கள், தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் படி உரிய காலத்திற்குள் தகவல் வழங்காமல் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் மேல் கிஞ்சிற்றும் அக்கறை இல்லாமல், வெளிப்படைத்தன்மை மற்றும் ஊழலற்ற நிர்வாகத்தை உருவாக்க இயற்றப்பட்ட சட்டத்தினை மதிக்காமல் செயல்பட்ட பொது அதிகார அமைப்பு மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம்*, 2005 *அனுமதித்திருக்கும்* 30 *நாட்களில் பொதுத் தகவல் அலுவலர், தகவல் தர இயலாத சூழ்நிலைக்கு தகுந்த காரண விளக்கங்கள் (*Violation of the Act) *இவ்வாணையத்தின் விசாரணையில் தெரிவிக்காத காரணத்தாலும், மேல்முறையீட்டாளருக்கு விரைந்து தகவலும், நீதியும் கிடைக்க, தற்போதைய வருவாய் கோட்டாட்சியர், கோட்டாட்சியர் அலுவலகம், புதுக்கோட்டை மாவட்டம் அவர்களை தகவல் பெறும் உரிமைச் சட்டம். 2005 பிரிவு 19(8)(a)(ii)இன் படி இவ்வழக்கின் பொதுத் தகவல் அலுவலராக நியமித்து இவ்வாணையம் உத்தரவிடுகின்றது.*

- *மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(1)-ல் கோரியுள்ள பட்டா மாற்றம் தொடர்பான தகவல்களை அளிக்கும் பொருட்டு, வருவாய் கோட்டாட்சியர், கோட்டாட்சியர் அலுவலகம், ஆவுடையார்கோவில் வட்டம் அவர்கள் அப்போதைய மற்றும் தற்போதைய பொதுத்தகவல் அலுவலர்கள், அப்போதைய மற்றும் தற்போதைய மேல்முறையீட்டு அலுவலர்கள் ஆகியோரை அழைத்து உரிய விசாரணை மேற்கொண்டு, அது குறித்த அறிக்கையை. வருவாய் கோட்டாட்சியர், கோட்டாட்சியர் அலுவலகம், ஆவுடையார்கோவில் வட்டம் அவர்கள், 29.07.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு ஆணையம் உத்தரவிடுகின்றது.*

- *மனுதாரருக்கு உரிய காலத்தில் தகவல் அளிக்காமல், மன உளைச்சலையும், பண விரயத்தையும், ஏற்படுத்தியதற்காக, பிரிவு 19(8)(b)-ன்கீழ் ரூ. 5,000/- (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்)-ஐ இழப்பீடாக மனுதாரருக்கு பொது அதிகார அமைப்பிலிருந்து வழங்கிவிட்டு, அதுகுறித்த அறிக்கையை ஆணையத்திற்கு வரும் 29.07.2026 அன்று நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்கும்படி தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் / வருவாய் கோட்டாட்சியர் மற்றும் முன்னாள் பொதுத்தகவல் அலுவலர் ஆகியோருக்கு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது.*

- *மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(1)-ல் கோரியுள்ள பட்டா மாற்றம் தொடர்பான தகவல்களை "தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 இன் படி இத்தகவல்கள் வழங்கப்படுகிறது" என்ற முத்திரையுடன் பொதுத் தகவல் அலுவலர் உரிய சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற இரு வார காலத்திற்குள் விரைவஞ்சலில் சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து விட்டு அதன் பின்னர், மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல், வருவாய் கோட்டாட்சியர், ஆவுடையார்கோவில் வட்டம் அவர்களின் விசாரணை அறிக்கையின் நகல் மற்றும் மனுதாரருக்கு அனுப்பி*

*வைத்த கடிதத்தின் அஞ்சலக இணையதள ஒப்புகை சீட்டின் நகல் (Proof of Postal Tracking) ஆகியவற்றினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு 29.07.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு தற்போதைய மற்றும் முன்னாள் பொதுத் தகவல் அலுவலர்களுக்கு ஆணையம் உத்தரவிடுகின்றது.*

**ஒம்/- (வி.பி.ஆர். இளம்பரிதி)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 6485/A/2023</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
வருவாய் கோட்டாட்சியர்,
கோட்டாட்சியர் அலுவலகம்,
ஆவுடையார்கோவில் வட்டம்,
புதுக்கோட்டை மாவட்டம்

அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் /
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
ஆவுடையார்கோவில் வட்டம்,
புதுக்கோட்டை மாவட்டம் - 614 618.

**<u>மனுதாரர்</u>**

திரு. R. சுந்தரேசன்
நிறைமங்களம்,
கரூர் அஞ்சல்,
ஆவுடையார்கோவில் தாலுகா,
புதுக்கோட்டை - 622 204.

Copy to file

KRM/PA 02.07.2026